செ.வெ.எண் : 50/ஆகஸ்ட் நாள் : 25.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் ரூ.25 லட்சம் வரை அதிகபட்சம் 35 சதவிகித மானியத்துடன் கூடிய தொழிற்கடனுதவி வழங்கப்படுகிறது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

அனைத்துப் பகுதி மக்களுக்கும் சுயவேலைவாய்ப்பை அளிக்கவும், வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும், அவர்களது பொருளாதாரம் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கிலும் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற கல்வித்தகுதி தேவையில்லை. வயது வரம்பு ஏதுமில்லை. வருமான உச்சவரம்பு இல்லை. உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில்கள் தொடங்க அரசு மானியத்துடன் வங்களின் மூலம் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் உற்பத்தி தொழில்களுக்கு அதிகபட்ச திட்டத்தொகையாக ரூபாய் 25 இலட்சம் எனவும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூபாய் 10 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடர்பான தொழில்களுக்கு திட்டத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேலும் மற்றும் சேவைத் தொழில்களுக்கு திட்டத் தொகை ரூபாய் 5 இலட்சத்திற்கு மேலும் இருப்பின் அத்தகைய திட்டங்களுக்கு கடனுதவி பெற விரும்புவர்கள் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 18 வயது நிரம்பியவர்கள் இதில் பயன் பெறலாம்.

தனிநபர் தொழில் முனைவோர்கள், உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள், அறக்கட்டளைகள் ஆகியோர் இத்திட்டத்தில் பயன் பெறலாம். பொதுப்பிரிவினர் நகர்ப்புறத்தில் தொழில் துவக்கும்பட்சத்தில் அவர்களுக்கு திட்டகடன் தொகையில் 15 சதவிகிதம் மானியமும், ஊரகப் பகுதியில் தொழில் துவக்கும் பட்சத்தில் 25 சதவிகிதம் மானியமும் வழங்கப்படும். சிறப்புப்பிரிவினர்களான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், சிறுபான்மையினர், மகளிர், முன்னாள் படைவீரர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நகர்ப்புறத்தில் தொழில் துவக்கும் பட்சத்தில் அவர்களுக்கு திட்டமதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதம் மானியமும், ஊரகப் பகுதியில் தொழில் துவக்கும்பட்சத்தில் 35 சதவிகிதம் மானியமும் வழங்கப்படும்.

தென்னை நார், கயிறு மற்றும் கயிறு துகள் கட்டிகள், முந்திரி பதப்படுத்துதல், சிறுதானியங்களிலிருந்து உணவுப்பொருட்கள் தயாரிப்பு, கேக் மற்றும் பிஸ்கட் தயாரிப்பு, உணவுப்பொருட்கள் தயாரிப்பு, அயோடின் உப்பு தயாரிப்பு, இரும்பு பர்னிச்சர் தயாரிப்பு, ஹலோபிளாக் தயாரித்தல், பிளே ஆஸ்செங்கல் தயாரித்தல், கருவேலமரத்தூளிலிருந்து தயாரிக்கப்படும் எரிப்பொருள்கட்டி தயாரித்தல், பிவிசி பைப் தயாரித்தல் ,பெட் பாட்டில்கள் தயாரித்தல் ,நோட்டு புத்தங்கள் தயாரித்தல், அட்டைப்பெட்டிகள் தயாரித்தல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், டிஜிட்டல் பிரிண்டிங், பிளக்ஸ் பேனர், அழகுநிலையம், உலர் சலவையகம், வீல் அலையன்மெண்ட் போன்ற தொழில்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெறலாம்.

இந்த திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்ட தொழில் மையத்திற்கான மானிய ஒதுக்கீடு ரூ.111.50 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் மேலும் விபரங்களைஅறிய தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசிஎண். 04567-230497. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் புதிதாக உற்பத்தி மற்றும் சேவை தொழில் ஆரம்பிக்க தக்க சான்றுகளுடன் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகத்தை தொடர்பு கொண்டு விபரங்களை பெற்று http://www.kviconline.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து, விண்ணப்ப நகலை மாவட்ட தொழில் மையஅலுவலகத்தில் சமர்ப்பித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**